**01.09.2022**

SC No. 126 / 2018 PW1. சந்திரசேகரன்

**Crl.MP.No. 1044 / 2022, நாள் 16.08.2022 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**1 வது எதிரி தரப்பில் கு.வி.**

நான் நாடார் இனத்தை சேர்ந்தவர். நான் நாடார் மகஜன சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். நான் மதுரை நாடார் உறவின்முறை சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். சங்கத்தில் மகமை வாங்குவார்கள். 1 வது எதிரி ரமேஷ் என்ற காமாட்சிபாண்டியன் என்பவர் நாகலாபுரத்தை சேர்ந்தவர். அவர் உறவின்முறையில் உறுப்பினராக உள்ளாரா என்று எனக்குத் தெரியாது. உறவின் முறையில் தெரிவித்து தான் கல்யாணம் நடத்துவோம். பொதுவாக திருமணத்தில் எதுவும் திருமணத்திற்கு பிறகு தகராறு வந்தால் உறவின்முறையில் தீர்த்து வைப்பார்கள் என்றால் தீர்த்துவைப்பார்கள். அவ்வாறு உறவின்முறையில் புகார் செய்யவேண்டும் என்றால் பணம் கட்டி புகார் கொடுக்க வேண்டும் என்றாலும் அதன் பிறகு முக்கியஸ்தர்கள் கூடி தீர்ப்பார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அது போன்ற விவகாரம் வந்தால் பெண் உறவின்முறைச் சேர்ந்தவர்களும், மாப்பிள்ளை உறவின்முறையைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து முக்கியஸ்தர்களை வைத்து தீர்ப்பார்களா என்று தெரியாது. எங்கள் உறவின்முறைக்கு இந்த திருமணம் குறித்து பதிவு செய்துள்ளேன். இந்த திருமணம் தெப்பக்குளத்தில் உள்ள காமராஜர் கல்யாண மண்டபத்தில் நடந்தது. அந்த மண்டபம் மதுரை, நாடார் உறவின் முறைக்கு பாத்தியப்பட்டது. இந்து முறைப்படி தாலி கட்டித்தான் திருமணம் நடைபெற்றது. அந்த தாலி, தாலி செயின் ஆகியவை மாப்பிள்ளை வீட்டில் 10 பவுன் போட்டார்கள். நான் வருமானவரி தாக்கல் செய்கிறேன். 100 பவுன் நகை, பணம் கொடுத்தது மற்றும் மற்ற செலவுகள் செய்தது பற்றி இதர செலவுகள் என்று வருமான வரி தாக்கல் செய்யும்போது திருமண செலவு என்று கொடுத்துள்ளேன். அந்த கணக்கை போலிசார் .....

விசாரணையிலோ, RDO விசாரணையிலோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை. 100 பவுன் நகை, 2 1/2 கிலோ வெள்ளி ஜாமான்கள், பணம் ஆகியவைகள் நாங்கள் கொடுக்கவில்லை என்றும், அதனால் தான் வருமான வரி தாக்கல் செய்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 100 பவுன் நகை, 2 1/2 கிலோ வெள்ளை, பணம் ஒரு லட்சம் , சீர் வரிசைகள் செய்தோம் என்று நான் சொல்வது தவறு என்றாலும் நான் அவ்வாறு செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எனது மகள் M.Sc., Bio-technology படித்திருந்தார். திருமணத்திற்கு முன்பு, மாப்பிள்ளை, பெண் ஒருவருக்கொருவர் பார்த்து, இருவரின் சம்மதத்தின் பேரில் தான் திருமணம் நடந்தது. நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றாலும், படித்த பெண் வேண்டும் என்பதற்காக எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் 1 வது எதிரி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு போட்ட நகைகள் எல்லாம் திருடு போய்விட்டது என்று புகார் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த புகார் திருமணம் ஆகி எவ்வளவு நாட்களில் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 1 வருடம் கழித்து கொடுக்கப்பட்டது. அந்த புகார் கொடுத்த போது, கணவனும் மனைவியும், வெளியூரில் இருந்து சொந்த ஊருக்கு வந்து திரும்பும்போது காணாமல்போனதாக கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரிதான். அந்த புகார் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றாலும் எந்தவித சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான். அந்த நகைகள், பொருட்கள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அந்த நகைகள் எல்லாம் எங்களிடம் கொடுக்க வேண்டும் என்று நான் எப்போதவது 1 வது எதிரியிடம் கேட்டதுண்டா என்றால் கேட்டது இல்லை. நகைகளைக் காணோம் என்று 1 வது எதிரி தான் புகார் கொடுத்தார். கல்யாணம் ஆனதில் இருந்தே கணவன், மனைவி சேர்ந்து வாழவில்லை. திருமணத்திற்கு பிறகு அவர்களுக்குள் உடலுறவு ஏற்பட்டதா என்று நானோ, எனது மனைவியோ கேட்டதுண்டா என்றால் எனது மனைவி கேட்டுள்ளார். அந்த உடலுறவு ஏற்படவில்லை என்பதால் புதூரில் ஒரு மருத்துவரிடம் எனது மகளை

காண்பித்தோமா என்றால் மனநல மருத்துவரிடம் கவுன்சிலிங்காக காண்பித்தோம். கவுன்சிலிங் சென்ற மருத்துவர் பெயர் வசந்தி. அவர் மனோதத்துவ நிபுணர் ஆவார். மருத்துவரிடம் எனது மகளை காண்பித்தோம் ஆனால் 1 வது எதிரி வரவில்லை. அவ்வாறு மருத்துவர்.வசந்தியிடம் எனது மகளை திருமணம் முடிந்து 1 1/2 வருடங்கள் கழித்து காண்பித்தோம். மருத்துவர் வசந்தியிடம் காண்பிப்பதற்கு முன்பு, விவாகரத்து கேட்டு எந்தவித வழக்கும் போடவில்லை. விவாகரத்து வழக்கினை முதன் முதலில் எனது மகள் தான் தாக்கல் செய்தார். விவாகரத்து வழக்கு போடுவதற்கு முன்பு எனது மகளோ, 1 வது எதிரியோ, எந்த விதமான புகாரும், எந்த காவல்நிலையத்திலும் கொடுக்கவில்லை. டாக்கரிடம் consult செய்தது எனது மகள் கணவரை விட்டு பிரிந்து வந்த பிறகு காண்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. கடந்த 2007 ம் வருடம் மாதம், தேதி ஞாபகம் இல்லை. கடந்த 2007 ம் வருடம் தான் எனது மகளை மருத்துவரிடம் அழைததுச் சென்றோம். மருத்துவர் எனது மகளையும் 1 வது எதிரியையும் வரச்சொன்னார். ஆனால் 1 வது எதிரி வரவில்லை. எனது மகள் மாத்திரைகள் சாப்பிட்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தார். அவ்வாறு தற்கொலை முயற்சி செய்தவுடன் நான் எனது மகளை மதுரைக்கு கூட்டிக்கொண்டு வந்தேன். மதுரைக்கு கூட்டிவந்த பிறகு, எனது மகள் இறக்கும்வரை மதுரையில் தான் இருந்தார். நான் எனது மகளை கூட்டிவந்த பிறகு, அவரை மதுரை அப்பலோ மருத்துவமனையில் சேர்த்தேனா என்றால் checkup மட்டும் போனோம். அதற்கான ஆவணங்கள் என்னிடம் கிடையாது. போலிசார் என்னிடம் வாங்கிய மறு வாக்குமூலத்தில், எனது மகளை மதுரைக்கு அழைத்து வந்து, மதுரை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்று சொல்லவில்லை. நான் எனது மகளை சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றாலும் அந்த ஆவணங்களை இந்த வழக்கிற்கு பாதகமாக இருப்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. திருமணம் ஆன பிறகு எனது மகள் மதுரை காமராஜ் பல்கலைகழகத்தில் M.phil படித்தார். எனது மகள் மதுரை காமராஜ் பல்கலைகழகத்தில் M.Phil படித்த காலத்தில் மதுரையில்

எங்களுடன் தான் தங்கியிருந்தார். எனது மகள் M.Phil படித்து முடித்துவிட்டார். எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை எனது மகள் M.Phil படித்தார் என்றால் வருடம் சரியாக ஞாபகம் இல்லை. M.Phil படிப்பு 2 வருட படிப்பாகும். எனக்கு எனது மகள் எந்த காலத்தில் படித்தார் என்று நன்கு தெரியும் என்றாலும் அந்த காலங்கள் வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசி, பெங்களூருக்கு அனுப்பிவைத்தோம் என்று சொல்லியுள்ளதில், எந்த எந்த வருடம், தேதி, மாதம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 4,5 முறை பஞ்சாயத்து செய்தோம். 4,5 முறை பஞ்சாயத்து செய்ததும் சொந்தக்காரர்கள் வைத்து செய்தோம். அந்த பஞ்சாயத்துகள் மற்றும் எனது மகள் வீட்டிற்கு நிறந்தரமாக வந்த பிறகுதான் விவாகரத்து வழக்கு கொடுக்கப்பட்டது. விவாகரத்து முதல் வழக்கு கொடுத்த பிறகு பஞ்சாயத்து பேசிதான் அந்த முதல் விவாகரத்து வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்றால் வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பதற்காக exparty ஆக விடப்பட்டது. அந்த பஞ்சாயத்து எந்த வருடம், தேதி, மாதம் நடந்தது என்று ஞாபகம் இல்லை. அந்த பஞ்சாயத்தில் என்ன பேசப்பட்டது என்றும், எந்த காரணத்திற்காக வழக்கு வாபஸ் பெறவேண்டும் என்று பேசப்பட்டது என்றும் ஞாபகத்தில் உள்ளது. எனது மகளுக்கு திருமணத்திற்கு முன்பே மனநிலையும், உடல்நிலையும் சரியாக இல்லை என்றாலும், அதை மறைத்து எனது மகளுக்கு திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. திருமணம் ஆகி 3 மாதங்கள் வரை எனது மகள் எங்கள் வீட்டில் தான் இருந்தார். அந்த 3 மாதங்களும், 1 வதுஎதிரி எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றாலும் எனது மகளை கூப்பிடவும் இல்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரி வந்துபோய்க்கொண்டு இருந்தார். அதனால் அவர்களுக்குள் எந்த மன வருத்தமும் இல்லை. பெங்களூரில் எனது மகள் மருந்து சாப்பிடுவதற்கு முன்பு, நான் பெங்களூருக்கு 2 முறை சென்றுள்ளேன். திருமணம் ஆன பிறகு 3 மாதங்கள் வரை 1 வது எதிரி பெங்களூரில் வசித்த போது நான் பெங்களூர் சென்றது இல்லை. எனது மகள் மருந்து சாப்பிடுவதற்கு முன்பு, 2 முறை நான்

பெங்களூர் சென்றது எந்த மாதம், தேதி,வருஷம் என்று தெரியாது. அந்த 2 முறை நான் பெங்களூர் சென்றது நான் எனது மகளை கொண்டு சென்று விடுவதற்காக சென்றேன். முதலில் நான் எனது மகளை பெங்களூரில் கொண்டு சென்று விட்டது எந்த தேதி, மாதம் வருடம் என்று ஞாபகம் இல்லை. அவ்வாறு கொண்டு சென்றுவிட்ட கொஞ்ச நாட்களிலேயே எனது மகள் திரும்பி வந்துவிட்டார். அவ்வாறு எனது மகள் வந்தபோது, மதுரை ரயில்நிலையத்தில் இருந்து எனது மகள் எனக்கு தகவல் சொல்லி நான் போய் அழைத்து வந்தேன். அதற்கு பிறகு பஞ்சாயத்து வைத்து தான் மீண்டும் பெங்களூரில் கொண்டு சென்றுவிட்டேன். அவ்வாறு பெங்களூரில் சென்ற கொஞ்ச நாட்களிலேயே எனது மகள் மருந்து சாப்பிட்டு மீண்டும் மதுரைக்கே வந்துவிட்டார். பெங்களூரில் 1 வது எதிரியும், எனது மகளும் குடியிருந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி எனக்கு உறவினர்கள் உண்டு. இந்த வழக்கில் அந்த உறவினர்கள் யாரையும் சாட்சியாக போடவில்லை. கல்யாணத்திற்கு முன்பே எனது மகள் B.Ed., படித்திருந்தார். எனது மகள் எப்போதாவது தான் வேலைக்கு போகவேண்டும் என்று சொன்னது உண்டா என்றால் சொன்னது இல்லை. நானும், எனது மகளை வேலைக்கு போகச்சொல்லி சொன்னது இல்லை. முதலில் போட்ட விவாகரத்து வழக்கை வாபஸ் பெற்றபிறகு 2 வது முறை விவாகரத்து வழக்கு போடப்பட்டது. இரண்டு வழக்குகளும் மதுரையில் தான் தாக்கல் செய்யப்பட்டது. அந்த இரண்டு விவாகரத்து வழக்குகளை தாக்கல் செய்யும்போதும் வக்கீல் வைத்து தான் போட்டோம். அந்த வக்கீல் பெயர் D.பிரபாகர் ஆகும். 2 வது முறை விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யும்போது, நான், எனது மகள் உடன் இருந்து, அவர்கள் என்ன சொன்னார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியும். முதல் விவாகரத்து வழக்கை வாபஸ் வாங்கும்போது, பஞ்சாயத்தார்கள் இருந்து, அந்த condition படி வாபஸ் வாங்கப்பட்டது. அவ்வாறு பஞ்சாயத்து பேசும் போது, 1 வது எதிரியின் முதலாளி உடன் இருந்தாரா என்றால் இல்லை. பஞ்சாயத்து பேசும்போது, 1 வது எதிரியின் முதலாளி சொன்னபடி, ஒத்துக்கொண்டபடி, 1 வது எதிரி மூன்று நாட்கள் சென்னையிலும், 3 நாட்கள் பெங்களூரிலும்,

வேலை செய்யவேண்டும் என்று ஒப்புக்கொண்டு, அந்த அடிப்படையில் தான் வழக்கு வாபஸ் வாங்க ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. ஆரம்பத்தில் இருந்தே எனது மகளுக்கு கல்யாணத்திலும் விருப்பம் இல்லை என்றாலும், பெங்களூருக்கு சென்று வசிப்பதிலும் விருப்பம் இல்லை என்றாலும் நானும் எனது மனைவியும் தான் எனது மகளை நிர்பந்தப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எனது மகள் திருமணம் ஆகி 3 மாதம் ஆனபிறகும், பெங்களூர் செல்ல விருப்பம் இல்லாமல் மதுரையில் இருந்ததால் நாங்கள் கட்டாயப்படுத்தி எனது மகளை பெங்களூரில் கொண்டுசென்று விட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு கொண்டு சென்று விட்டபோதும், எனது மகள் பெங்களூரில் வசிக்காமல் மதுரைக்கு வந்துவிட்டார் என்றும்., மதுரை காமராஜர் பல்கலைகக்கழகத்தில் படிக்க வேண்டும் என்று எனது மகள் சொல்லி மதுரையிலேயே தங்கி வந்து பெங்களூர் செல்வதை தவிர்த்து வந்தார் என்றாலும் நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கு பிறகும், நிர்பந்தப்படுத்தி நான் எனது மகளை பெங்களூரில் கொண்டுசென்றுவிட்டேன் என்றாலும் பிறகு தற்கொலைக்கு முயற்சித்தாதாக திரும்பி வந்துவிட்டார் என்றும், நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றாலும், எந்த நிகழ்வுகளும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரிக்கு தாம்பத்திய சுகம் அளிப்பதற்கு தகுதி இல்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது மகள் தான் வாழ விருப்பம் இல்லாமல் தாம்பத்தியத்திற்கு உட்படாமல் வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மனைவி, இந்திய முறைப்படியும், இந்து முறைப்படியும் வாழவேண்டும் என்று எனது மகளை அனுப்பிவைத்தார். எனது மகள் கணவருடன் தான் இருக்க வேண்டும் என்று எனது மனைவி விரும்பினார். 2 வது முறை விவாகரத்து வழக்கு போட்ட மனு exparty ஆகிவிட்டது. Exparty ஆன பிறகு Domestic violence act படி வழக்கு போட்டோம். அந்த Domestic violence act படி மனுவில் மாதம் ரூ.20,000/- பராமரிப்பிற்காக கொடுக்க இடைக்கால உத்தரவானது. அந்த இடைக்கால

உத்தரவிற்கு பிறகு தான், 1வது எதிரி exparty உத்தரவை இரத்து செய்வதற்கு மேல்முறையீடு செய்தார். மேல்முறையீட்டு வழக்கை 1வது எதிரி தாக்கல் செய்துள்ளது பற்றி எங்களுக்கு அறிவிப்பு வந்தது. நானும், எனது மகளும், அந்த அறிவிப்பினை கொண்டு சென்று வக்கீலிடம் காட்டினோம். வக்கீலிடம் அந்த அறிவிப்பை காண்பித்து எதிர்வாதாடுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தோம். அதற்கு பிறகு 1 வருடம் கழித்து எனது மகள் இறந்தார். விவாகரத்து செய்ததில் இருந்தும், அந்த exparty ஆன பிறகும் 1வது எதிரி எந்தவித காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் தான் இருந்து வந்தார் என்றும் நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி வீட்டிற்கு வந்தார் என்றும், அடித்தார் என்றும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. Exprty ஆன பிறகு maintenance நீதிமன்றத்தால் வழங்கப்பட்டதால், அதை எதிர்த்து வாதாடும் சூழ்நிலைக்கு 1வதுஎதிரி தள்ளப்பட்டார் என்றால் சரியல்ல. எங்கள் வீடு உள்ளது பழைய மகாலிப்பட்டி ரோடு ஆகும். அந்த ரோடு தென்வடல் ரோடு ஆகும். அந்த ரோட்டில், எங்கள் வீடு கிழக்கு பார்த்த வீடு ஆகும். எங்கள் வீட்டிற்கு தெற்கே ஒரு சந்து உள்ளது. எனது வீட்டிற்கு மேற்கே யார் வீடு உள்ளது என்றால் வீடு உள்ளது  ஆனால் அவர் பெயர் தெரியாது. எங்கள் பின்னால் உள்ள வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையே பொது சுவர் உள்ளது. எனது வீடு இரண்டு அறைகள் கொண்ட வீடு என்றால் சரியல்ல. 4 அறைகள் கொண்ட வீடு ஆகும். வீட்டில் நுழைந்தவுடன் தெற்கு பக்கம் ஒருஅறை உள்ளது என்றால் சரியல்ல. வடக்கு பக்கம் ஒரு அறை உள்ளது. வடக்கு பக்க அறைக்கு வடக்கு பக்கம் சமையல்அறை உள்ளது. எங்கள் வீட்டில் உள்ளது ஒரே ஒரே அடுப்படி என்றால் இரண்டு அடுப்படி உள்ளது. வடக்கு பக்க அறையில் அடுப்படிக்கான மேடை இருக்கிறது. அங்கு தான் சமையல் செய்யப்படுகிறது. எங்கள் வீட்டிற்கு கேஸ் இணைப்பு உள்ளது. அந்த அடுப்படி மேடையில் தான் கேஸ் சிலிண்டர், உள்ளது என்றால் அங்கு இல்லை. வேறு ஒரு அடுப்படியில் தான் உள்ளது. போலிசார் எங்கள் வீட்டை பார்க்கும்போது நான் வீட்டில் இல்லை. வெளியூர் போவதற்காக போயிருந்தேன். அருப்புக்கோட்டை போவதற்காக

போய்விட்டேன். அருப்புக்கோட்டையில் என்ன விஷேஷம் என்றால் ஒரு வளைகாப்பு விஷேஷம். திருமணத்திற்காக நான் அருப்புக்கோட்டைக்கு அன்றைய தினம் செல்லவேண்டியது இருந்து நான் செல்லவில்லை. நான் திருமணத்திற்காக செல்லவேண்டி நான் இருந்போது தான் எனது மகள் இறந்ததாக எனக்கு தகவல் வந்தது என்றால் சரிதான். நான் வளைகாப்பு விஷேஷத்திற்காக செல்லவேண்டியிருந்த விஷேஷம் காலை 10.00 மணிக்கு இருந்தது. நான் அந்த விசேஷத்திற்கு புறப்பட்டு சென்றேன். அவ்வாறு சென்றபோது, எனது மகள் இறந்துவிட்டார் என்று தகவல் வந்தது. அது தான் சரி. அவ்வாறு தான் நான் RDO விசாரணையிலும்., போலிசாரின் இரு முறை விசாரணையின் போதும் நான் சொல்லியுள்ளேன். இரண்டாவது அடுப்படி இருப்பதாக நான் சொல்லியுள்ளது, அந்த அடுப்படி முதல் அடுப்படிக்கு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் கிழக்கு திசையில், 25 அடியில் உள்ளது. எனது வீடு இரண்டு அறைகள் கொண்ட வீடு என்றாலும், நான் வழககிற்காக சொல்லிக்கொடுத்து 2 அடுப்படிகள் இருக்கும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையிலும், RDO விசாரணையிலும் எனது வீட்டில் 2 அடுப்படிகள் உள்ளது பற்றி சொன்னேனா என்றால் அவர்கள் இது பற்றி விசாரிக்கவில்லை. நான் சொல்லவில்லை. எனது மனைவி எனக்கு முதன் முதலில் தகவல் சொன்ன போது, எனது மகள் எங்கு இறந்துகிடந்தார் என்று சொன்னார். அதேபோல், சம்பவம் நடக்கும்போது, எனது மனைவி எங்கு இருந்தார் என்று சொன்னார். போலிசார் விசாரணையில், எனது மனைவி எங்கு இருந்தார் என்றும், அடுப்படி எங்கு உள்ளது என்றும், இறந்த உடல் எங்கு இருக்கிறது என்று பார்த்தார்கள். அதை எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எங்கள் வீட்டில் கேஸ் இணைப்பு உள்ளது. 2 வதாக சொன்ன அடுப்படி மேடையில், கேஸ் அடுப்பு, கேஸ் சிலிண்டர் ஆகியவை இருந்தது. அதை போலிசார் பார்த்து எழுதிக்கொண்டார்கள். அந்த அறையில் தீ இருந்ததற்கான தடயங்கள் இருந்ததாக போலிசார் பார்த்தார்கள். 2 வது அடுப்படி அறையில் சோபா செட் எதுவும் கிடையாது. நான் சொன்னது

போல் 2 வது அடுப்படி எங்கள் வீட்டில் கிடையாது என்றாலும், அங்கு அடுப்போ, சிலிண்டரோ, அல்லது சமையலுக்கான உபகரணங்களோ எதுவும் கிடையாது என்றாலும் நான் இந்த வழக்கிற்காக சொல்லிக்கொடுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. RDO விசாரணையில் எனது மனைவி வாக்குமூலம் கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன். எனது மனைவியை விசாரணை செய்த பிறகு என்னை விசாரித்தார்கள். RDO என்னை விசாரித்தபோது, எனது மனைவி சொன்னதை என்னிடம் படித்துக் காண்பித்து சரியாக உள்ளதா என்று கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. படித்து காண்பித்தபோது அவர்கள் சொன்னது வாஸ்தவம் தான் என்று சொன்னேன். என் மகள் பொன்மலர் இறந்தது பற்றி என் மனைவி கொடுத்த வாக்குமூலம் அனைத்தும் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று RDO விசாரணையில் நான் சொல்லி ஒப்புக்கொண்டு நான் கையொப்பம் செய்தேன். எனக்கு முதன்முதலில் தகவல் கொடுத்தபோது, எனது மனைவி எங்கிருந்தார் என்றும், அவர் எப்படி போய் பார்த்தார் என்றும், எனது மகள் எங்கு எப்படி கிடந்தார் என்றும் எனக்கு போனில் தகவல் சொன்னார். எனது மனைவியின் செல் நம்பரில் இருந்து எனது செல் நம்பருக்கு போன் செய்தார். போலிசார் விசாரித்தபோது, எனது மனைவியின் செல் நம்பர், எனது செல் நம்பர் ஆகியவற்றை கேட்டு வாங்கிக்கொண்டார்கள். எனது வீட்டிற்குள் நுழைந்தவுடன் வடக்கு பக்கம் உள்ள அறையில் கிழக்கு பார்த்தது போல் 2 ஜன்னல்கள் இருக்கிறது. அடுப்படை மேடை உள்ள அறையில் ஜன்னல் உள்ளதா என்றால் முதலாவது அடுப்படியில் கிழக்கு பார்த்தாற்போல் 2 ஜன்னல்கள் உள்ளது. எனவே முதல் பத்தியில் நுழைந்தவுடன், ஒரு அறை, முதலாவது அடுப்படி தவிர வேறு அறைகள் கிடையாது. எனது மனைவி எனக்கு போன் செய்த போது, 18.01.2010 ம் தேதி காலை 11.00 மணியளவில் மண்ணெண்ய் ஊற்றி தீ வைத்து சமயலறையில் இறந்துவிட்டார் என்று சொன்னார். நான் RDO விசாரணையிலும், போலிசார் விசாரணையிலும், எனக்கு மேல்சொன்னவாறுதான் தகவல் கிடைத்ததாக சொன்னேன். சம்பவம் நடந்த பிறகு, எனது மனைவி அடுப்படியில் தான்

இருந்தார் என்றால் இல்லை. புகார் கொடுக்கும்போது நான் உடன் இருந்தேன். நான் அதில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். புகாரில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியும். புகாரில், 18.01.2010ம் தேதி 11.00 மணிக்கு என் கணவர் அருப்புக்கோட்டை திருமணத்திற்கும், என் மகன் கம்பெனிக்கும், சென்றிருந்த சமயம், என் மகள் மன உளைச்சல் காரணமாக வீட்டின் சமையல் அறையில் இருக்கும்போது வீட்டின் முன்அறையில், என் மகள் பொன்மலரின் அலறல் சத்தம் கேட்கவே, நான் பார்க்கும்போது, வீட்டின் உள் தாழ்ப்பாள் போட்டு தீயில் எரிந்துகொண்டிருந்தார் என்றும், நான் சத்தம் போட்டவுடன் தெருவில் சென்றவர்கள் வந்து காலால் உதைத்து கதவை உடைத்துப்பார்க்கும்போது, எனது மகளின் உடலில் தீ எரிந்துகொண்டிருந்ததால் தீயை அணைத்தோம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் எனது வீட்டை வந்து பார்த்தபோது, அங்கு உடைந்துகிடந்த பொருட்களை எல்லாம் எடுத்து சென்றார்கள். உடைந்த கதவானது, எங்கள் வீட்டிற்கு நுழைவதற்காக ரோட்டின் மேல் உள்ள கதவு என்றால் சரிதான். முதல் அடுப்படியும், முதல் அறைக்கும் இடையே கதவு எதுவும் இல்லை. எனக்கு ரேஷன் கார்டு உண்டு. அந்து ஜீனி கார்டா என்றால் அது அடையாளத்திற்காக உள்ள கார்டு ஆகும். அதில் மண்ணெண்ணெய் எதுவும் வாங்க முடியாது. எங்கள் வீட்டில் மண்ணெணெய் அடுப்பு உள்ளது. அந்த மண்ணெண்ணெய் அடுப்பு திரி அடுப்பு ஆகும். பம்ப் செய்யும் அடுப்பு அல்ல. அந்த மண்ணெண்ணெய் அடுப்பானது முதல் அடுப்படியில் தான் இருக்கும். நான் மண்ணெண்ணெய் கடையில் தான் வாங்குவேன். கடையில் blue கலர் மண்ணெண்ணெய் தான் கொடுப்பார்கள். அதற்கு இரசீது கொடுக்கமாட்டார்கள். எந்த கடையில் மண்ணெண்ணெய் வாங்குவேன் என்றால் பக்கத்து கடையில் வாங்குவேன். அந்த கடைக்கு பெயர் கிடையாது. சின்ன கடை ஆகும். மண்ணெண்ணெய் அடுப்பு இல்லை என்றும், மண்ணெண்ணெய் எனக்கு தேவையில்லை என்றும், மண்ணெண்ணெய் வாங்குவேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டில் ஒரே ஒரு அடுப்படி தான்

உள்ளது என்றும், அதில் கேஸ் ஸ்டவ் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. எனது மகள் சமைப்பாள். சாதாரணமாக மதிய சாப்பாடு காலை சுமார் 10.00 மணியிலிருந்து 01.00 மணிக்கு இடைப்பட்ட காலத்தில் தான் சமைப்பார். நான் சொன்னது போல் மண்ணெண்ணெய் ஊற்றி எனது மகள் தற்கொலை செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு, 1 வது எதிரி மீது உள்ள காழ்ப்புணர்ச்சியினால் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு அடுப்படி, ஹால், நுழைந்தவுடன் உள்ள வரண்டா தவிர மற்றொரு பெட்ரூம் உள்ளது. சம்பவ சமயத்தில் அந்த பெட்ரூமில் நான் தான் பயன்படுத்திவந்தேன். அதனால் எனது மகளுக்கென்றோ, மகனுக்கு என்றோ தனியாக அறைகள் இல்லை என்றால் மாடியில் அறைகள் உள்ளது. போலிசார் வந்து பார்த்தபோது, மாடி இருப்பதாகவோ, மாடியில் அறை இருப்பதகோ, மாடியில் எனது மகளுக்கு அறை இருப்பதாகவோ பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். போலிசார் சம்பவ தினத்தில் காலை சுமார் 11.00, 11.30 மணிக்கு மாடியில் உள்ள எனது மகளின் அறையைப் பார்த்தார்கள். நான் அப்போது உடன் இருந்தேன். போலிசார் எனது மகளின் அறையை சோதனையிட்டு பார்த்தார்கள். எனது மகள் உபயோகித்த நோட்டு புத்தகங்கள், மற்றும் புத்தகங்கள் அங்கு தான் இருந்தது. எனது மகள் வழக்கமாக கையெழுத்து போடுவது C.பொன்மலர் என்று தான் போடுவார். போலிசார் எனது மகளின் அறையைப் பார்த்து எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் பார்த்தார்கள். ஆனால் என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை. கடிதம் எடுத்ததாக சொல்லப்படுவது, எனது மகளின் அறையில் இருந்து தான் எடுக்கப்பட்டது. என்னை 2 முறை போலிசார் விசாரணை செய்தபோதும், RDO விசாரணையிலும், எங்கள் வீட்டின் மாடியில் அறைகள் உள்ளது என்றும், அந்த அறைகளில் எனது மகளின் அறையில் இருந்து கடிதம் எடுத்ததாக சொல்லவில்லை. எனது மகன், 2 மகள்கள் அனைவரும் சிறு வயதில் ஒரே பள்ளியில் தான் படித்தார்கள் என்றால் 2 மகள்கள் வேறு பள்ளியிலும், மகன் வேறு பள்ளியிலும் படித்தார்கள். எனது மகள் இருவரும் சென்ஜோசப் பள்ளியில் படித்தார்கள்.

எனது மகன் VMJ பள்ளியில் படித்தார். பள்ளிக்கூடம் படிக்கும் காலத்தில் எனது மகள்களும், மகனும் ஒன்றாக உட்கார்ந்து படிப்பார்கள். எனது மகள் பொன்மலர் இறக்கும்போது, அவருக்கும் எனது மனைவிக்கும், எனக்கும் இடையில் மனவருத்தம் எதுவும் கிடையாது. நானோ, எனது மனைவியோ, எனது மகள் விவாகரத்து பெறுவதை நாங்கள் ஆதரித்தோம். கணவருடன் தான் வழவேண்டும் என்று எனது மகளை நிர்பந்தித்தோம் என்றும், முடியாது என்று எனது மகள் சொன்ன பிறகு தான் விவாகரத்து தாக்கல் செய்தோம். எனது மகள் முடியாது என்று சொன்ன போது எல்லாம் விவாகரத்து ஆகிவிட்டா என்றால் விவாகரத்து ஆவதற்கு முன்பே முடியாது என்று சொன்னார். எனது மகளுக்கு விவாகரத்து ஆகவில்லை என்பதால் எனக்கும் எனது மனைவிக்கும் எந்தவிதமான மனவருத்தமும் இல்லை. எனது மகள் இறந்த மறுநாளே தற்கொலை கடிதத்தை காவல்நிலையத்தில் கொடுத்தேன். இடைபட்ட காலத்தில், எனக்கும் எனது மனைவி, எனது மகளுக்கு இடையில் விவாகரத்து சம்பந்தமாக எதுவும் வருத்தம் இருக்கிறாதா என்று போலிசார் கேட்டார்களா என்றால் என்னிடம் கேட்கவும் இல்லை. என் மீது சந்தேகப்படவும் இல்லை. என் மீது இருந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்தவற்காக அதசாஆ.3 பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் எனது மகன் ஒரு பெண்ணை காதலித்து அதனால் அவர் வீட்டை விட்டு போய் விட்டார் என்றால் சரியல்ல. போலிசில் அது ரிப்போர்ட் ஆனது என்றால் சரியல்ல. எனது மகனின் திருமணம் சம்பந்தமாக எவ்வித பேச்சுவார்த்தையும் கிடையாது. சம்பவ காலத்தில் எனது மகன் ஒரு பெண்ணை காதலித்து அதனால் தகராறு ஆகிவிட்டது என்றால் சரியல்ல. அதனாலும், எனது இறந்த மகள் பொன்மலர் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. அதசாஆ.3 பற்றி RDO விசாரணையிலும், போலிசாரின் முதல் விசாரணையிலும் நான் சொல்லவில்லை. நான் சொன்னது போல், 1 வது எதிரிக்கும், எனது இறந்த மகள் பொன்மலருக்கும் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது என்றாலும் எனது மகள் பொன்மலர்தான் கல்யாணத்திற்கு முன்பு இருந்தே கல்யாணம் வேண்டாம் என்ற மனநிலையில்

இருந்தார் என்றால் சரியல்ல. கல்யாணம் ஆன பிறகும், கணவருடன் செல்வதற்கோ, பெங்களுருக்கு செல்வதற்கோ விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் பணி இடத்தில் பணி மாறுதல் பற்றி ஒப்புக்கொண்ட பிறகும், எனது மகள் பொன்மலர், 1 வது எதிரியுடன் வாழ விரும்பவில்லை என்றால் சரியல்ல. பின்னிட்டு, 1 வது எதிரியின் நிர்பந்தத்தின் பேரில், Exparty நடிவடிக்கை எடுத்ததால் மீண்டும் எனது மனைவிக்கும், எனது மகள் பொன்மலருக்கும்தான் கருத்துவேறுபாடும், சண்டையும் ஏற்பட்டது என்றாலும் நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது எனது மனைவி அடுப்படியில் தான் இருந்தார் என்றாலும் நான் அதை மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மகள் பொன்மலரின் இறப்பிற்கு உண்மையான காரணங்கள் மறைக்கப்பட்டு, 1 வது எதிரி மீது பின்னிட்டு வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அப்பலோ மருத்துவமனைக்கு செல்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே ஒரு முறை என் மகள் பொன்மலர் தற்கொலை முயற்சி செய்யவில்லை. பெங்களூரில் தற்கொலை முயற்சி செய்ததற்கான குற்ற வழக்கு எதுவும் போடப்படவில்லை. எனது மகளுக்கு மாதவிடாய் காலங்களில் அதிகமான வலி ஏற்பட்டது கிடையாது. எனது மகளுக்கு தலைவலி கூட வந்தது கிடையாது. எனது மகள் பொன்மலருக்கு எப்போதும் மாதவிடாய் காலங்களிலும் மற்ற காலங்களிலும் வயிற்றுவலி, தலைவலி ஏற்பட்டும் என்றாலும் அதற்காக எனது மகள் மாத்திரிகளை எடுத்துக்கொண்டார் என்றாலும் இந்த வழக்கிற்காக அவற்றை மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எனது மகள் செல்போன் வைத்திருந்தார். எனது மகள் பொன்மலரின் செல்போன், எனது செல்போன், எனது மகனின் செல்போனையும் போலிசார் கைப்பற்றி check செய்து பார்த்துவிட்டு கொடுத்துவிட்டார்கள்.

**<u>மறுவிசாரணை :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**01.09.2022**

SC No. 126 / 2018 PW2. பொன்முருகன்.

**Crl.MP.No. 1044 / 2022, நாள் 16.08.2022 உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

<u>1 வது எதிரி தரப்பில் கு.வி.</u>

சம்பவ சமயத்தில் நான் ஒரு பெண்ணை காதலித்து அதனால் தகராறு ஏற்படவில்லை. அதனால் தகராறு ஆனது என்றும் நான் அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. அதனாலையும் எனது சகோதரி பொன்மலர் மன வருத்தத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. சைக்கிள் கடைக்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே சுமார் 1 1/2 கிமீ தூரம் இருக்கும். எனக்கு போன் செய்தபோது, அன்று காலை சுமார் 10.45 மணி இருக்கும். எனது அம்மா அவரது செல்போனில் இருந்து எனது செல்போனுக்கு போன் செய்தார். போலிசார் விசாரணையின்போது, எனது அம்மாவின் செல்போன் நம்பரையும், எனது செல்போன் நம்பரையும் வாங்கினார்களா என்று ஞாபகம் இல்லை. எங்கள் செல்போனை போலிசார் வாங்கி பார்த்தார்களா என்றும் ஞாபகம் இல்லை. எனக்கு 10.45 மணிக்கு எனது அம்மா போன் செய்தபோது, எனது அக்கா கதவை பூட்டிக்கொண்டு கதவைத் திறக்கமாட்டேன் என்கிறார் என்று சொன்னார். எனது அம்மா போன் செய்த போது, எந்த அறை என்று சொல்லவில்லை. நான் வீட்டிற்கு சென்றபோது என்ன நேரம் இருக்கும் என்றால் எனக்கு போன் வந்த 10 நிமிடத்திலேயே சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு போன போது, போலிசார் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. பக்கத்துவீட்டுக்காரர்கள் அனைவரும் இருந்தார்கள். எனது அக்கா பொன்மலரின் ரூம் கதவின் உடைந்த பாகங்களை போலிசார் எடுத்துசென்றார்களா என்றால் கதவில் இருந்து

எந்த பாகமும் உடைந்து இருக்கவில்லை. போலிசார் வந்து, எனது அக்கா பொன்மலரின் அறையை பார்த்தபோது எனது அப்பா அசா1 ம் உடன் இருந்தார். பக்கத்து வீட்டுக்கார்களும் இருந்தார்கள். எனது அக்கா பொன்மலருக்கும், 1 வது எதிரிக்கும் இடையேயான குடும்ப விபரங்கள் எல்லாம் எனது அம்மா, அப்பா, எனது அக்கா எல்லாரும் எனக்கு சொல்லித்தான் எனக்குத் தெரியும். RDO விசாரணையின் போது நான் எனது பெற்றோருடன் இருந்தேனா என்றால் இல்லை. அப்போது நான் வீட்டில் தான் இருந்தேன். போலிசார் என்னை முதன் முதலில் சம்பவம் நடந்த அன்றே விசாரணை செய்தார்கள். நேரம் சரியாகத் தெரியவில்லை. 10.45 மணிக்கு எனக்கு தகவல் தெரிந்த கொஞ்ச நேரத்தில் விசாரணைசெய்தார்கள். நான் சொன்ன விபரங்களை போாலிசார் எழுதிக்கொண்டார்கள். நான் கையொப்பம் செய்தேனா என்றால் கையொப்பம் செய்ததாக ஞாபகம் இல்லை. எனது அம்மா புகார் கொடுக்க சென்றது பற்றி எனக்குத் தெரியும். எனது அம்மா புகார் கொடுக்க சென்றபோது என்னையோ, எனது அப்பாவையோ உடன் அழைத்தாரா என்று ஞாபகம் இல்லை. புகார் வீட்டில் வைத்து கலந்து பேசி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் பேசிக்கொண்டது ஞாபகம் இல்லை. ஆனால் எனது அம்மாவும், அப்பாவும் பேசிக்கொண்டு புகார் கொடுத்தார்கள். எங்கள் வீட்டிற்கு போலிசார் வந்தபோது என்ன நேரம் இருக்கும் என்று ஞாபகம் இல்லை. நான் B.Sc. Computer science படித்துள்ளேன். நான் வீட்டிற்கு வந்து எவ்வளவு நேரம் கழித்து போலிசார் வந்தார்கள் என்றால் சுமார் 1/4 மணி நேரத்தில் இருந்து 1/2 மணி நேரத்திற்குள் வந்தார்கள். எவ்வளவு நேரம் எங்கள் வீட்டில் இருந்தார்கள் என்றால் சுமார் 2 மணி நேரம்

இருந்தார்கள். நான் சொன்னது போல் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனக்கு ஏற்பட்ட நெருக்கடியினால் நான் சம்பவஇடத்திலும், ஊரிலும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக பின்னிட்டு என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றாலும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** :

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை